**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 17.06.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 8 (LW10)

2025ம் ஆண்டு ஜுன் திங்கள் 17ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலு | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை :**

நான் வாகைவயல் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து பிழைப்பு நடத்தி வருகின்றேன். சோலந்துார் குரூப் கிராம உதவியாளர் சாட்சி சரண்ராஜ் என்பவரை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 19.11.2023ம் தேதி மாலை 04.30 மணியளவில் நானும், சாட்சி சரண்ராஜ் என்பவரும் வாகைவயல் பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்தோம். அப்போது போலிசார் அங்கு வந்தார்கள். நாங்கள் சுமதி வீட்டிற்கு போலிசார் அழைத்ததன் பேரில் சென்றோம். போலிசார்

எதிரி சுமதியின் வீட்டின் அடுப்படியில் இருந்து ஒரு ஆணிபுடுங்கும் ராடு போன்று ஒன்றையும், இரத்தக்கரை படிந்த நைட்டியையும் போலிசார் கொண்டு வந்து வீட்டின்முன்பு வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் எழுதாத இரண்டு வெள்ளைப்பேப்பர்களில் கையொப்பம் வாங்கினார்கள். சும்மா வந்ததற்கு என்று சொல்லி கையொப்பம் வாங்கியதாக சொன்னார்கள். அந்த கையொப்பங்கள் தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் ஆகும். அவை முறையே அ.த.சா.ஆ.7 மற்றும் 8 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகின்றன. போலிசார் அத்தாட்சியில் கைப்பற்றிய இரும்புராடுதான் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு ராடு ஆகும். அது சா.பொ.1 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் அத்தாட்சியில் கைப்பற்றிய சிவப்பு கலர் நைட்டிதான் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் நைட்டி ஆகும். அது சா.பொ.2 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது, கடந்த 19.11.2023ம் தேதி மாலை 04.15 மணிக்கு நானும், சாட்சி சரண்ராஜ் என்பவரும் சோழந்தூர் ராஜிவ்காந்தி பஸ் ஸ்டாப் அருகே நின்று பேசிக்கொண்டிருந்த போது, காவல் ஆய்வாளர் இந்த வழக்கின் எதிரி சுமதி என்பவரை எங்கள் முன்பாக கைது செய்து விசாரித்தார் என்றும், அப்போது ஆஜர் எதிரி இந்த வழக்கு சம்மந்தமாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்

தன்னை அழைத்து சென்றால், தன் கணவரை கொலை செய்ய பயன்படுத்திய இரும்பு கம்பியையும், சம்பவத்தின் போது தான் உடுத்தியிருந்த சிவப்புக்கலர் நைட்டியையும் மறைத்து வைத்திருந்த இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அவ்வாறு பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சாட்சி சரண்ராஜும் கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு அதே தேதி மாலை 05.30 மணிக்கு வாகைவயல் கிராமத்தில் உள்ள எதிரி சுமதி வீட்டிற்கு சென்றோம் என்றும், அப்போது ஆஜர் எதிரி அவரது வீட்டிற்கு சென்று பயன்படாத சமயற்கட்டில் மறைத்து வைத்திருந்த ஆணிபுடுங்கும் சுமார் 2 1/2 அடி நீளமுள்ள இரும்பு கம்பியையும், சிவப்பு கலர் பூ போட்ட நைட்டியையும் எடுத்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார் என்றும், அந்த பொருட்களை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் நானும், சாட்சி சரண்ராஜும் கையொப்பம் செய்தோம் என சொல்லிவிட்டு, தற்போது நானும் ஆஜர் எதிரியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால், அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் சொல்லிக்கொடுத்துதான் நான் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஐ அடையாளம் காண்பித்தேன் என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, போலிசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .